

## இறுதிச் ெ பம்:

நிறைவு செபத்தைச் சொல்ல அதிச உறுப்பினர் ஒருவரை அழைக்கலாம்.

## முடிவு பாடல்:

# இதயம் மகிழுதம்மா

இதயம் மகிழுதம்மா துயர் கறைகள் மறையுதம்மா
உள்ளமும் துள்ளுதம்மா - உந்தன்
தாய்மையின் நினைவாலே - அம்மா

1.தாய் எனும் போதினிலே – மனம்
தானுனைத் தேடுதம்மா 2 ஈன்ற
தாயும் போற்றும் உந்தன்
பாதம் பணிந்திடுவேன் - அம்மா

2. வாழ்வெனும் பாதையிலே - ஒளி
விளக்காய் நீ இருப்பாய் 2 உண்மை
மனதும் உயரந்த நெறியும்
நிறைந்து வாழ்ந்திடுவேன் - அம்மா



INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

ஆகஸ்ட்டு 2021

# அதிசசிந்தனை



## மரியா, எதிர்நோக்குதலின் தாய்

நிகழ்வு:
**மரியாவின் விண்ணேற்றம்**

சமூக ஊடகப் போக்கு:
**#mothershop**

### முன்னுரை:

சிலுவை அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாவும், மகதலா மரியாவும் நின்று கொண்டிருந்தனர். இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்புச்சீடரையும் கண்டு தம் தாயிடம், “அம்மா, இவரே உம் மகன்” என்றார். பின்னர் தம் சீடரிடம் “இவரே உம் தாய்” என்றார். அந்நேர முதல் அச்சீடர் அவரை தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார். (யோவான் 19:25–27).

## தொடக்கச் ெ பம்:

அதிசவில் ஒருவரை செபம் செய்ய அழைக்கலாம்.

## தொடக்கப்பாடல்:

### மாதாவே துணை நீரே உம்மை

மாதாவே துணை நீரே உம்மை
வாழ்த்திப் போற்ற வரம் தாரும்
இதோ பிள்ளைகள் வந்தோம் அம்மா
ஏற்றன்பாக எமைப்பாரும் (2)

1. வானோர் தம் அரசே தாயே எம்
மன்றாட்டை தயவாய்க் கேளும்
ஈனோர் என்றெம்மை நீர் தள்ளாமல்
என்காலத்துமே தற்காரும்

2. ஒன்றே கேட்டிடுவோம் தாயே யாம் ஓர்
சாவான பாவந்தானும்
என்றேனும் செய்திடாமல் காத்து
எம்மை சுத்தர்களாய்ப் பேணும்



## உரையாடல்:




2017ம் ஆண்டு மே மாதம் 10ம் தேதி, திருத்தந்தை பிரான்சிஸ் உரையைக் கேட்க உலக முழுவதையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான யாத்ரீகர்களும் நம்பிக்கையாளர்களும் புனித பேதுரு சதுக்கத்தில் திரண்டனர். "கிறிஸ்துவ எதிர்பார்ப்பு மீதான மறைக்கல்விக்கு, எதிர்நோக்குதலின் தாய் மரியாவைதான் இன்று நாம் கண்ணோக்குகிறோம்" என அன்றைய உரையில் திருத்தந்தை கூறினார். இக்கட்டான நேரத்தில், சிலுவையில் தமது மகன் மரிக்கும் "அந்த வேளையில் பெரும்பாலான நண்பர்கள் அச்சம் காரணமாக ஒளிந்து கொண்ட போது" மரியா அங்கு நின்று கொண்டிருந்தார்.

எல்லாமே கைவிட்டு போகும் நேரத்திலும், நின்று காத்திருக்கும் பண்பை எதிர்நோக்குதலின் தாய் மரியா நமக்குக் கற்பிக்கிறார். உலகத் தீமையால் அவர் சூழ்ந்து கொண்ட போதும் கடவுளின் மறைபொருள் திட்டத்தில் அவர் சூழந்து கொண்ட போதும் கடவுளின் மறைபொருள் திட்டத்தில் அவள் நம்பிக்கை வைத்திருந்தாள். அந்த இக்கட்டான நேரத்திலும் வாழ்க்கையின் போராட்டச் சிக்கலைக் கண்டு மரியா துவண்டு விடவில்லை, தமது கோலத்தைக் கண்டு அழுது புலம்பவில்லை. "மகிழ்ச்சி காலத்திலும் துக்கக் காலத்திலும் வாழ்க்கையை ஏற்றுக்கொள்ளும் பெண்ணாக அவள் இருந்தாள்" என திருத்தந்தை கூறினார்.

சிலுவை அருகில் மரியா, "நின்று கொண்டிருந்தார்" என நற்செய்திகள் கூறுகின்றன. அவள் அழுது புலம்பினாளா, துக்கமும் வேதனையும் கொண்டாளா என்பது பற்றி நற்செய்திகள் ஒன்றும் கூறவில்லை. அந்த துயரமான வேளையிலும் அவள் நின்று கொண்டிருந்தாள், தம் மகனோடு அவளும் வேதனையை அனுபவித்தாள்.

இறுதியில், அவள் நமது எதிர்நோக்குதலின் தாய் என திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார். பலர் ஓடி விட்டனர், இன்னும் பலர் அச்சம் கொண்டனர். ஆனால் அந்த நேரத்தில் தனக்கே உரித்தான நிலையில் அவர் நின்று கொண்டிருந்தாள்.

இயேசு, நம் அனைவருக்கும் அன்னையாக வழங்கிய மரியா, நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் ஆதரிக்கிறாள். எதிர்நோக்குதலின் தாயான அவள், எழுந்து நேர் கொண்ட பாதையில் நட என கூறுகிறார்.

**உங்களுடைய எண்ணங்களை அதிச உறுப்பினர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்:**

- சிக்கலான அல்லது சிரமமான நேரத்தில் அன்னை மரியாவை நீங்கள் நாடி, உங்களோடு அவள் "நின்ற" அனுபவம் உண்டா? உண்டு என்றால் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- வாழ்க்கையில் வேதனை அல்லது போராட்டத்தை எதிர்நோக்குபவர்களோடு "நிற்கும்" அன்னை மரியாவிடமிருந்து நீங்கள் கற்றுக் கொள்வதென்ன?

## இறைவார்த்தை:

### லூக்கா 1: 37-38

கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை என்றார். பின்னர் மரியா, "நான் ஆண்டவரின் அடிமை; உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்றாள். அப்பொழுது வானதூதர் அவரை விட்டு அகன்றார்.

## சிந்தனை:

- மேலே உள்ள வா கத்தை சத்தமாக வாசிக்கவும். திறந்த மனதோடு கேளுங்கள்.

  ஒரு வார்த்தை அல்லது வசனம் உங்கள் மனதைத் தொடும் வரை மௌனமாக வாசியுங்கள்.
- அந்த வார்த்தை அல்லது வசனம் வழி தூய ஆவியானவர் உங்களுக்குச் சொல்லும் செய்தி என்ன?
- உங்களைத் தொட்ட அந்த வார்த்தை அல்லது வசனம் பற்றியும் ஆண்டவர் உங்களுக்கு உணர்த்திய செய்தி பற்றியும் சிறிய குழுவுடன் (3-4 பேர்) பகிர்ந்து கொள்ளவும்.

## செயல்:

- இந்த காலக்கட்டத்தில் யாரோடு நீங்கள் "நிற்க" விரும்புகிறீர்கள் என்பதை யோசித்துப் பாருங்கள். அந்த குறிப்பிட்ட நபருக்காக வீட்டில் தனியாக அல்லது குடும்பத்தோடு செபமாலை சொல்லுங்கள்.
- இன்றைய செய்தி வழி, தனியாக அல்லது அதிச அளவில் என்ன செய்ய கடவுள் என்னை அழைக்கிறார்?